**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 216** **நாள் : 22.12.2024**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், திருவான்மியூர் கடற்கரையில் இன்று நடைபெற்ற நீர்மிகு பசுமையான சென்னையின் மாபெரும் இசை வீதி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.**

திருவான்மியூர் கடற்கரையில் இன்று (22.12.2024) நடைபெற்ற நீர்மிகு பசுமையான சென்னையின் மாபெரும் இசை வீதி விழாவில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசியதாவது:**

இந்தியாவின் மிகப்பெரிய இசை வீதி விழா நம்முடைய பெருமைமிக்க சென்னை மாநகரில் நடைபெற்று வருகிறது.

இந்த இனிய விழாவில் இந்த மாலை நேரப் பொழுதில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாபெரும் இசை வீதி விழா நடத்துவதன் முக்கிய நோக்கம் நம் சென்னை மாநகரை பசுமையாகவும், நீர்மிகு சென்னையாகவும் பராமரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது.

இந்த சென்னை மாநகரம் மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் நம் மாநிலம் முழுவதுமே பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

நம் மாநிலத்தின் மரமான பனை மரத்தை மீட்டெடுக்கும் வகையில் கடற்கரை ஓரங்களில் ஒரு கோடி பனை விதைகள் நடும் பணியை ஏற்கனவே தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பசுமை பரப்பை அதிகரிக்கும் வகையில் ஆங்காங்கே மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருக்கு மற்றொரு பெருமையும் உள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தால் கிரியேட்டிவ் சிட்டி ஆப் மியூசிக் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது நம் சென்னை.

சென்னையின் கானா பாடல்கள் தொடங்கி, மார்கழி இசை கச்சேரி முதல் சினிமா இசை வரை தனி வரலாறும், பெருமையும் உண்டு. பல்வேறு பெருமைக்குரிய சென்னையில் வளர்ந்து வரும் இசை கலைஞர்களை ஊக்குவிப்பது மாநகராட்சிக்கு மிகப் பெருமை.

எந்த ஒரு விஷயத்தையும் இசையோடு சேர்ந்து பொதுமக்களுக்கு வழங்கினால் அது அவர்கள் மனதில் ஆழ படியும். அந்த வகையில் நம் சென்னையை பசுமையாகவும் நீர்மிகு சென்னையாகவும் பராமரிக்கும் வகையில் Live Green, Love Blue என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னையில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 240 நீர்நிலைகள் கண்டறியப்பட்டு அவை புனரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் (Sponge park) ஏற்படுத்தப்பட்டு, மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளில் சென்னை தொடர்ந்து முன்னேற பொதுமக்களின் பங்களிப்பும் மிகவும் அவசியமாகிறது.

இன்றைய இசையின் இனிமையை நாம் அனுபவிக்கும் அதே வேளையில் சென்னை மாநகரின் பசுமையை மேம்படுத்தும் நம்முடைய பொறுப்பையும் நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். மரங்களை நடுவதற்கும் அவற்றை பேணிக்காப்பதற்கும் இளைஞர்கள் அனைவரும் மாநகராட்சியின் சார்பில் அழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு சிறிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதாவது மாடித்தோட்டம் அமைத்தல், தங்களுடைய பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்தல் போன்ற ஏதேனும் ஒரு நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு நம்முடைய பசுமைப்பரப்பளவை அதிகரிக்க உறுதுணையாக இருக்க வேண்டும்.

இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் விதைப்பந்துகள் வழங்கப்படும். இந்த விதை பந்துகளை தங்களுடைய பகுதியில் உள்ள இடங்களில் தூவினால் பிற்காலத்தில் அவை மரங்களாக வளர்ந்து நமக்கு பயன் தரும். எனவே இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் நம்முடைய மாநகரின் பசுமைப்பரப்பை அதிகரிக்கவும், நீர்மிகு சென்னையாக மாற்றவும் தங்களுடைய பங்களிப்பை அளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் திருமதி கலைச்செல்வி செல்வம், திருமதி விஷாலட்சி, மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**